1975 எப்ரல் 8]

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள்

* 600 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், 1974-ம் ஆண்டில், தீண்டாமை ஒழிப்புக் குற்றங்கள் சம்பந்தமாக ஏதேனும் வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அவற்றுள் தண்டனையில் முடிந்த, அபராதம் விதிக் கப்பட்ட வழக்குகள் முறையே எத்தனை?

(உ) இன்னும் எத்தனை வழக்குகள் முடியாமல் உள்ளன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :

(அ) ஆம். 144 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) அவற்றுள் தண்டனையில் முடிந்த வழக்குகள் 31-லும் அபராதம் மட்டுமே விதிக்கப்பட்டுள்ளன.

(உ) 40 வழக்குகள்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த 144 வழக்குகளிலே 30 வழக்குகளிலே தண்டனை விதிக்கப்பட்டது என்று கூறினார்கள். தொடர்ந்து இம்மாதிரியான வழக்குகளை நிலைநிறுத்துவதற்கு முடியாத நிலைமையிருக்கிறது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது என்றே கருதுகிறேன். ஆகவே, இம்மாதிரி வழக்குகளை நடத்துவதற்கு வேறு நடவடிக்கைகளை கையாண்டு, உண்மையானக் குற்றவாளிகளை தண்டனைக் குட்படுத்த, அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, 144 வழக்கு கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 31 வழக்குகளில் தண்டனை விதிக்கப் பட்டிருக்கின்றன. 40 வழக்குகள் இப்பொழுது நடந்து கொண்டிருக் கின்றன. ஆகவே, 50 சதவிகித வழக்குகள் நடவடிக்கை எடுக்கப்பட்டவை. குறிப்பில் இல்லை. எனது அனுபவத்தை வைத்துச் சொல்லும்போது அங்கங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊர்ப் பெரியவர்கள் சமாதானம் செய்து, இம்மாதிரி செய்யக்கூடாது, இனி மேல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று புத்திமதி சொல்கிறார்கள். அது கூட இந்த நாட்டுக்குத் தேவை. அதைக்கூட மீறினால் நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. அதைச் செய்து வருகிறார்கள்.

[முற்பகல் 10.00 மணி]

திருமதி ஜோதிவெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்தத் தீண் டாமை ஒழிப்பு வழக்குகளில் ஏற்படக்கூடிய இடைஞ்சல்கள் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையிலே பெரும்பாலாக சமாதானம் செய்தும் குற்றவாளிகள் சரிவரத் தண்டிக்கப்பட இயலாத நிலைமை இருப் பதால் அந்தச் சட்டத்திலே திருத்தம் செய்து அதைத் திருத்தியமைக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலைமை இல்லை. காரணம இருக்கிற சட்டத்தின்படி உள்ள படியே நடவடிக்கை எடுத்தால் அதுவே பெரிய தண்டனையாக இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள், இங்கே கேள்வி கேட்கிற உறுப்பினர்கள் வெளியே இதே முறையைக் கையாள முடியவில்லை. அங்குள்ள நிலைமையை உத்தேசித்து சமாதானம் செய்வதில் ஈடுபடுகிற நிலைமை வந்து விடுகிறது. இதனால் இரண்டு வகையான லாபம். ஒன்று அப்படிப்பட்டவர்கள் தன்னை அறியாமல், சட்டத்தின் நிலைமை தெரியாமல் அப்படிச் செய்கிறவர்கள் திருந்தி தங்களை மாற்றிக்கொள்வார்கள், இரண்டாவது அதைப் பார்த்து மற்றவர்களும் திருந்தவேண்டுமென்பது. சட்டத்திற்குரிய படி தண்டனை கொடுப்பது என்றால் அது காலம் போகப்போகத்தான் செய்யப்படமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[2.] 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண்: 2—மாநில ஆயத் தீர்வை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I mover "That the allotment of Rs. 62,77,000 under Demand No. 2-State Excise Department be reduced by Rs. 100."

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss policy, I move, "That the allotment of Rs. 62,77,000 under Demand No. 2-State Excise Department—be reduced by Rs. 100."

THIRU K. P. GOPAL: Sir, to discuss about the failure of the Government to take necessary steps to prevent illicit distillation and sale of arrack and also ganja plantation, I move—

"That the allotment of Rs. 62,77,000 under Demand No. 2—State Excise Department—be reduced by Rs. 100.

1975 எப்ரல் 8]

திரு. எம். பேரவைத் தலைவர் சுரேந்திரன் அவர்களே, பிரெஞ்ச் பாலீஷ் தயாரிப்பதில் "நான் பாய்ஸன்" ஆல்கஹால் தயாரிப்பதை நிறுத்துவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 62,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுவதை தடுக்க ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் சர்வ கட்சி உஷார் கமிட்டிகள் அமைப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 62,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ 1,94,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the defective manner of preparation of voters' list for the coming General Elections, I move—

"That the allotment of Rs. 1,94,86,000 under Demand No. 8—Elections—be reduced by Rs. 100."

THIRU J. JAMES: Sir, to discuss about the necessity to prepare a revised electoral roll instead of amending the existing electoral rolls for the 1976 General Elections, I move—

"That the allotment of Rs. 1,94,86,000 under Demand No. 8—Elections—be reduced by Rs. 100."

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளர்களுக்கு ஆகும் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 1,94,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.